16.09.2025

அ.வ.எண்.105/2020

வா.சா.1 - பாலசுப்பிரமணியன், த/பெ.ராமசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 16.09.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இந்த வழக்கை தடத்தை அழித்து போவதற்கில்லாமல் தடுத்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் புகைப்படத்தில் உள்ளவாறு கிழமேற்காக உத்தி 2 அடி உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன தகவலின் பேரில் தான் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்குரையில் 25 அடி தடம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. என்னுடைய மூல ஆவணமான வா.சா.ஆ.1 முதல் 3, 5 வரையிலான எந்த ஆவணத்திலும் 25 அடி தடம் உள்ளது என்று சொல்கிறேன் என்றால் அடி குறிப்பிடவில்லை தென்வடல் தடம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு பட்டா, மற்றும் புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் அவரது வரைபடத்தில் தென்வடலாக தடம் செல்வதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அது பக்கத்தில் உள்ளவரின் தடம் ஆகும்.

3. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் தென்வடல் தடம் உள்ளது என்றால் சரிதான். அது பக்கத்து பூமியின் தடம் ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள தடம் தென்வடல் தடம் என்றால் சரிதான். அது பக்கத்து பூமியின் தடம் ஆகும். **மேற்படி புகைப்படம் (4 எண்ணிக்கைகள்) மற்றும் ரசீது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.5 ஆவணம், நானும் என் சகோதரிகளும் ஏற்படுத்தி கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை பத்திரத்தில், பிரதிவாதிகளின் பூமி வழியாக 25 அடி தடம் செல்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, மாமூல் தடப்பாத்தியம் உள்ளது.

பிரதிவாதிகள் 2001 ம் ஆண்டில் சொத்தை கிரயம் பெற்றார் என்றும், நாங்கள் 2006 ல் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான்.

4. தடம் எங்களுக்கு சொந்தமானது என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். 1973 ம் ஆண்டு வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில், கூட்டுறவு சங்க கடனை அடைக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அந்த கடனை இதுநாள் வரை நாங்கள் அடைக்கவில்லை என்றும், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. மாதிரி வரைபடத்தில் தடத்தின் நீள, அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல், வழக்குரை தாக்கல் செய்த போது B அட்டவணை சொத்தான தடம் 25 அடி குறிப்பிட்டு விட்டு பின்னிட்டு 12 அடி என எவ்வாறு திருத்தம் செய்துள்ளேன் என்றால் புல வரைபடத்தில் இருந்ததை வைத்து திருத்தம் செய்துள்ளேன். எந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 379/3 காலையில் மேல்கோட்டில் தென்வடலாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5. புல எண். 379/3 பட்டாவில் என்னுடைய பெயர் உள்ளதா என்றால் இல்லை. புல எண். 379/3 பட்டாவை தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை, பட்டா என் பெயரில் இல்லை. வழக்குரையில், வழக்கு நிலுவையில் உள்ளபோது இவ்வழக்கின் பிரதிவாதிகள் புல எண். 379/3 A வை LAND RECORDS UPDATING SCHEME ன் கீழ் மாற்றம் செய்தது சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. LAND RECORDS UPDATING SCHEME ன் கீழ் எந்த வருடம் மாற்றம் செய்யப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் தெரியாது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur